**சமுர்த்தி நுண்நிதி எழுதுகருவிகள் சுழற்சி நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் - 2020 -2022**

---

சமுர்த்தி நுண்நிதி எழுதுகருவிகள் சுழற்சி நிதியத்தின் 2020 சனவரி 01 முதல் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த மூன்று ஆணடு காலப்பகுதிக்கான செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற ஒவ்வொறு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் சம்பந்தமாக வருடாந்தமும் உரிய நேரத்திலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தாமாக வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையாக ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் சம்பந்தமான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், சட்ட விதிகளின் மூலம் காட்டப்படக் கூடியவாறான காலப்பகுதிக்குள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரங்களுக்குள் தயாரித்தல் இடம்பெறுகின்றது என உறுதிப்படுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் தொடர்பான ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனித்துக் கொள்ள வேண்டும்.

**1.3 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2) ஈ பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் செயலாற்றல் அறிக்கையுடன் பொதுத் திறைசேரியின் அரச நிதித்திணைக்களத்திற்கு பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2020,2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.4 2019 திசெம்பர் 31 இல் காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலைமை**

நிதியத்தினால் இறுதியாக தயாரிக்கப்பட்ட 2019 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த சொத்துக்கள்,பொறுப்புக்கள்,வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| நிதிக்கூற்று விடயங்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| **சொத்துக்கள்** | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 33,198,564 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 134,519,860 |
| **மொத்த சொத்துக்கள்** | **167,718,424** |
| **உரிமை மற்றும் பொறுப்புக்கள்** | |
| உரிமை | 144,867,690 |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 22,850,734 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **167,718,424** |
| மொத்த வருமானம் | 13,336,957 |
| மொத்த செலவுகள் | 2,318,911 |
| **மிகை** | **11,018,046** |

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 144 | களஞ்சிய பொருட்களின் விநியோகம் கணக்காளரின் மேற்பார்வை மற்றும் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நுண்நிதிப் பிரிவின் எழுதுகருவிகள் சுழற்சி நிதியத்தின் கீழ் வாங்கப்பட்ட எழுதுகருவிகள் மட்டுமே வங்கி எழுதுகருவிகள் களஞ்சியத்தில் காணப்படுவதால் , அக்களஞ்சியம் 2019 மார்ச் 13 பிரதம கணக்காளரால் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் நுண்நிதிப் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள் ளது. | |
| (ii) | நிதிப் பிரமாணம் 189 மற்றும் 486 | 2022 திசெம்பர் மாதம் வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் 2017 சனவரி 30 முதல் 2022 ஆகஸ்ட் 29 வரை வைப்புச் செய்யப்படும் மாற்றப்படாத தொகை ரூபா 349,152 ஆன 14 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2017 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து எழுதுகருவிகள் சுழற்சி நிதியத்தின் தொடர்பான காசோலைகள் திணைக்களத்தின் வேறொரு நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது டன், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட வங்கிக்குத் தெரிவிக்கப்பட்டு, எதிர்காலத்தில் இந்த காசோலைகள் கண்டறியப்பட்டு சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 396 | 2016 ஒக்டோபர் 05 முதல் 2019 ஜூன் 26 வரை வழங்கப்பட்டும் மாற்றப்படாத ரூபா 928,675 பெறுமதியான 10 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2016 ஒக்டோபர் 05 முதல் 2019 ஜூன் 26 வரை இந்த காசோலைகள் மாவட்ட அலுவலகங்கள் அல்லது பிற பிராந்திய அலுவலகங்களில் இருந்து நேரடியாக எழுதுகருவிகள் சுழற்சி நிதியத்திற்கு நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட காசோலைகள் என்பதுடன், இதுவரை இந்த காசோலைகள் தொடர்பான எந்த தகவலும் கண்டறியப்படுவதற்குமுடியா திருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின 4 ஆம் பந்தியன் பிரகாரம் பெறுகை ஆரம்பம் முதல் இறுதி வரை ஒவ்வொரு பெறுகைக் நடவடிக்கையின் படிகள் முறையாக விவரிக்கப்படக்கூடிய வகையில் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான பெறுகை திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்றும், எதிர்காலத்தில் மதிப்பிடப்பட்ட பெறுமதிகள் சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறையே ரூபா 107,321,465 மற்றும் ரூபா 121,921,981 ஆன வங்கி எழுதுகருவிகளின் பெறுகை தொடர்பாக பெறுகைத்திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் செய்தித்தாள் விளம்பரங்களை வெளியிடப்பட்டு தேசிய அளவில் போட்டி ஏலங்களை அழைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது சந்தை விலைக் கோரல் முறையின் கீழ் ஒரே வழங்குநரிடமிருந்து ஒரே வகையான எழுதுகருவி பல சந்தர்ப்பங்களில் வெவ்வேறு விலைகளிலும் ஒரே வகையான எழுதுகருவி வெவ்வேறு வழங்குநர்களிடமிருந்தும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஆண்டின் தொடக்கத்தில் தேவையை இனங்கண்டு அதற்கேற்ப பெறுகை மேற்கொள்ளப்படாத காரணத்தால் செய்யாததால், 2022 ஆம் ஆண்டின் எழுதுகருவி பெறுகையின்போது ரூபா 7,209,040 நட்டமொன்று நிதியத்திற்கு ஏற்பட்டிருந்தது. | இருப்பு முகாமைத்துவத்திற்கு பொருத்தமான களஞ்சியங்கள் காணப்படாமை, அச்சிடப்படுகின்ற புத்தகங்கள் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதால் குறுகிய காலத்தில் அச்சடிக்கப்பட வேண்டியமை, பெறப்படுகின்ற வருமானம் குறுகிய காலத்தில் முதலீடுகள் மூலம் நிதியத்திற்கு வட்டி வருமானம் சேர்க்கப்படுதல் போன்ற விடயங்களின் காரணமாக இந்த பெறுகை முறை பின்பற்றப்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பெறுகையிலிருந்து பிரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அவ்வாறு பிரிக்கப்படுவதற்கு முன் அதற்கான உரிய அதிகாரத்துடன் நியமிக்கப்பட்ட பெறுகை குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், அத்தகைய அங்கீகாரம் பெறப்படாமல் பெறுகைகளின் அதிகார எல்லை திணைக்கள பெறுகை குழுவிற்கு மட்டுப்படுத்தப்பட்டு 2022 மே 23 முதல் 2022 திசெம்பர் 17 வரையான காலப்பகுதியில் 10 சந்தர்ப்பங்களில் பிரிக்கப்பட்டு ரூபா 69.8 மில்லியன் எழுதுகருவிகளின் பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இருப்பு முகாமைத்துவத்திற்கு பொருத்தமான களஞ்சியங்கள் காணப்படாமையால் இந்த பெறுகை முறை பின்பற்றப்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 விளைவற்ற செலவு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வங்கி அமைப்பு தொடர்பான அனைத்து விடயங்களும் சுற்றறிக்கைகள், இணையத்தின் மூலம் மற்றும் சட்டத்தில குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும் அவ்விடயங்கள் தொடர்பாக அதிகாரிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக வண்ணமயமான பக்கங்களுடன் கூடிய கார்ட்டூன் படங்களைக் கொண்ட 3400 கையேடுகளை அச்சிடுவதற்கு 2022 ஆம் ஆண்டில் ரூபா 3,485,000 செலவிடப்பட்டிருந்தது. | சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கியைப் பற்றி அதிகாரிகள், சமூகத் தலைவர்கள் மற்றும் வெளி தரப்பினருக்கு பிரயோசனமளிக்கும் வகையில் உள்ளடக்கங்களை இலகுவாகவும் கவர்ச்சியாகவும் புரிந்துகொள்ளும் வகையில் இந்தக் கையேடு வடிவமைக்கப்பட்டு வங்கி முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் கீழ் அச்சிடப்பட்டுள்ளது. | செலவினங்களின் அவசியம் தொடர்பாக நிர்வாக சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.2 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்தி

அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் படி, 2019 சனவரி 01 2019 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதி தொடர்பாக என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் 3.2 ஆம் பிரிவின் கீழ் உள்ளடங்கிய பின்வரும் கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

| | தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்தி | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | லங்கா சலுசல நிறுவனத்திற்குச் சொந்தமான களஞ்சியசாலையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த எழுதுகருவிகள் 2010 ஆம் ஆண்டு அகற்றப்பட்டிருந்த போதிலும், அதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,454,112 தொகையான களஞ்சிய வாடகை வைப்பு மீண்டும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை | இந்த நிறுவனத்திற்கு பல தடவைகளில் கோரிக்கைகள் மற்றும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன | பெற வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் எழுதுகருவிகளை அச்சிடுவதற்கு அரசு அச்சீட்டு திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 21,269,895 ஆன தொகை 04 வருடங்களுக்கு மேற்பட்டிரந்த போதிலும் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை | அரச அச்சீட்டு திணைக்களத்தினால் விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கொடுப்பனவு செய்யப்பட முடியாதிருந்தது. | நிலுவை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 877(1) இன் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக பாதீடு தயாரிக்கப்படவில்லை. | இற்றை வரை அவ்வாறான பதிவேடொன்று தயாரிக்கப்படாததுடன் எதிர்காலத்தில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |